திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர விண்ணப்பிக்கலாம்**

First Published : 12 Oct 2010 12:23:35 PM IST

அரியலூர், அக். 11: அரியலூர் மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஆடுகள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் விவசாயிகளுக்கு உரிய தகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 18 வயது நிரம்பியவராகவும், 65 வயது நிரம்பாதவராகவும் இருத்தல் வேண்டும். வாரியத்தில் சேர விரும்புபவர்கள் கண்டிப்பாக 5 ஆடுகள் அல்லது அதற்கு மேல் வைத்திருக்க வேண்டும்.

ஆடு வளர்ப்போர்கள் மற்றும் மேய்போர்கள் வேறு நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்திருக்கக் கூடாது.

மேலும், வேறு நல வாரியங்களில் உறுப்பினராய் இருப்பவர்கள் ஆடு வளர்போர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர விரும்பினால் மற்ற நல வாரிய உறுப்பினர் பதவியை ரத்து செய்து விட்டு, இந்த வாரியத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

இந்த நிபந்தனைகளுக்குள்பட்ட விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தையும், குடும்ப அட்டையின் நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றை தங்கள் பகுதியிலுள்ள அரசு கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் கொடுத்து உடனடியாக தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். நிபந்தனைகளுக்குள்பட்ட விண்ணப்பங்கள் அக்டோபர் 29 ஆம் தேதிக்குள் வந்து சேர வேண்டும் என்றார் அவர்.

**விவசாயக் கடன் காலக்கெடுவை நீட்டிக்கக் கோரிக்கை**

First Published : 12 Oct 2010 12:51:50 PM IST

திருச்சி, அக். 11: விவசாயக் கடனுக்கான காலக் கெடுவை நீட்டிக்க வேண்டும் என இந்திய விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருச்சிக்கு அண்மையில் வந்த சோனியா காந்தியிடம் இந்தச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் அளித்த மனுவில் தெரிவித்திருப்பது:

"மத்திய அரசு 2008 ஆம் ஆண்டில் | 70,000 கோடி விவசாயக் கடனை தள்ளுபடி செய்தது. இதில், 5 ஏக்கருக்கு அதிகமாகவுள்ள விவசாயிகளுக்கு 25 சதம் தள்ளுபடி செய்யப்பட்டு, மீதத் தொகை செலுத்த ஜூன் 30-ம் தேதியுடன் காலக்கெடு முடிந்துவிட்டது.

இதனால், தற்போது வங்கிகளில் விவசாயிகளின் டிராக்டர், உழவுக் கருவிகள், நிலம் ஆகியவை ஏலம்விடப்படுகின்றன. இதன் காரணமாக, விவசாயிகள் கடும் வேதனைக்கு உள்ளாகி, விவசாய பணிக்குச் செல்லாமல் உள்ளனர்.

எனவே, கடனுக்கான காலக்கெடுவை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க வேண்டும். மேலும், 5 ஏக்கருக்கு அதிகமாக வைத்துள்ள விவசாயிகளுக்கும் பயிர்க் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்' என நாகராஜன்
தெரிவித்துள்ளார்.

**பாசன விவசாயிகளுக்கு கூடுதல் ஆயக்கட்டு தீர்வை ரத்து: தமிழக அரசு**

First Published : 13 Oct 2010 12:04:38 AM IST

சென்னை, அக். 12: பாசன விவசாயிகள் சங்க உறுப்பினர்களிடம் இருந்து ஏக்கருக்கு கூடுதல் தண்ணீர் தீர்வையாக வசூலிக்கப்பட்டு வரும் தொகை ரத்து செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

ஏரிகளில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் பெறும் விவசாயிகளிடம் இருந்து தீர்வைத் தொகை வசூலிக்கப்பட்டு வந்தது. பயிர் வாரியான தீர்வையாக இது இருந்து வந்தது. அதாவது, மக்காச்சோளத்துக்கு ஏக்கருக்கு 150 என்றும், நெல்லுக்கு ஏக்கருக்கு 225 எனவும், கரும்புக்கு ஏக்கருக்கு 400 என்றும் வசூலிக்கப்பட்டு வந்தது. பின்னர் இந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன.

இதனிடையே, கூடுதல் தண்ணீர் பெறுபவர்களுக்கு மட்டும் ஆயக்கட்டு தீர்வை வசூலிக்கப்பட்டு வந்தது. இதை ரத்து செய்யவும் தமிழக அமைச்சரவை செவ்வாய்க்கிழமை முடிவு செய்தது.

தமிழக அரசின் 48-வது அமைச்சரவைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

விவசாயிகளுக்கு நிலவரியாக புஞ்சை நிலங்களுக்கு சராசரியாக ஏக்கருக்கு 15 என்பதற்குப் பதிலாக, 2 வீதமும், நஞ்சை நிலங்களுக்கு சராசரியாக ஏக்கருக்கு 50 வீதமும் வசூலிக்கப்பட்டு வந்தது. இதை, 5 வீதம் குறைக்கப்பட்டது. இந்த உத்தரவு, கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து, நிலவரியின் மீது வசூலிக்கப்பட்டு வந்த தலவரி மற்றும் தலமேல்வரி ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டதற்கு அமைச்சரவை பின்னேற்பு வழங்கியது.

பாசன விவசாயிகளுக்கு: அதிக தீர்வை, அதிக தண்ணீர் வரி மற்றும் மேம்பாட்டு வரிகளை ரத்து செய்யவும்; பாசன விவசாயிகள் சங்க உறுப்பினர்களிடமிருந்து ஏக்கருக்கு கூடுதல் தண்ணீர் தீர்வையாக 70 வீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. இது, ரத்து செய்யப்படுகிறது. இதனால், 15 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்.

முறையற்ற பாசனம்: முறையற்ற பாசனம் செய்யும் விவசாயிகளிடம் இருந்து ஏக்கருக்கு 600 வீதம் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை ஏக்கருக்கு 200-ஆகக் குறைக்கப்படும். இப்போது நடைமுறையில் உள்ள ஜமாபந்தி முறையை எளிமைப்படுத்தித் தொடரவும்; கிராமக் கணக்குகளில் தேவையற்ற வருவாய்க் கணக்குகளை நீக்கவும் செய்யவும், எளிமைப்படுத்தவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தினமலர்

**உழவர் சந்தையில் காய்கறி வாங்கிப் பயனடைய கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:54 IST

சிதம்பரம்: உழவர் சந்தையில் நியாயமான விலையில் காய்கறி வாங்கிப் பயனடைய பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. சிதம்பரம் அண்ணா கலையரங்கில் உள்ள உழவர் சந்தையில் சுற்றுப்பகுதியில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரை வகைகளை அரசு பஸ்களில் சுமைக்கூலி இல்லாமல் கொண்டு வந்து அரசு நிர்ணயித் துள்ள விலைக்கு நேரடி விற்பனை செய்கின்றனர். நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் உழவர் சந்தையில் தினசரி புதிய காய்கறிகளை வாங்கி பயனடையலாம் என உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:51 IST

கடலூர்: கடலூரில் வரும் 15ம் தேதி விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் நடக்கிறது. கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு: மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் வரும் 15ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது. கூட்டத்தில் விவசாயிகள் வேளாண் சார்ந்த குறைகளை தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப் படும். இவ்வாறு செய் திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் கண்காட்சி துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:26 IST

கிள்ளை: சிதம்பரம் அருகே சி.முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வேளாண் கண்காட்சி துவக்க விழா நடந்தது. சிதம்பரம் பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். மாணவர்கள் சார்பில் வேளாண் கண்காட்சி நடந்தது. சி.முட்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த கண்காட்சிக்கு வேளாண் விரிவுரையாளர் ராஜ்பிரவின் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் செங்குட்டுவன் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். வேளாண் ஆசிரியர் சாந்தி, உதவி தலைமை ஆசிரியர்கள் மோகன், சந்திரசேகர் பேசினர். சி.முட்லூர் சுற்றுப்பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் முன்னோடி விவசாயிகள் சீனுவாசபெருமாள், பானுசந்தர் ஆலோசனை வழங்கினர். மாணவர் மூவேந்தன் நன்றி கூறினார்.

**பூஞ்சானக் கொல்லி மருந்து தயாரிப்பு சுய உதவிக்குழுவினரின் வித்தியாச முயற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,21:13 IST

கிள்ளை : தில்லைவிடங்கனில் டான்வா பண்ணை மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் உயிர் பூஞ்சானக்கொல்லி மருந்து விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

அரசு மூலம் கடன் பெற்று மகளிர் சுய உதவிக் குழுவினர் அவரவர்கள் திறமைக்கேற்ப மெஸ், மெழுவர்த்தி தயாரிப்பு, சந்தனம் வில்லை தயாரிப்பு என பல்வேறு தொழில்கள் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர். சில உதவிக் குழுக்கள் மினி பஸ், லாரிகளுக்கு உரிமையாளர்களாக கூட நிர்வகித்து வருகின்றனர்.

இவர்களுக்கு மத்தியில் சிதம்பரம் அடுத்த தில்லைவிடங்கன் டான்வா பண்ணை மகளிர் சுய உதவிக்குழுவினர் சற்று வித்தியாசமாக விவசாயத்தை பாதுகாக்கும் வகையில், உயிர் பூஞ்சானக் கொல்லி மருந்துகள் தயாரிக்கின்றனர். "சூடோ மோனாஸ் புளூரன்ஸ்' மற்றும் "ரைக் கோடெர்மா விரிடி' மருந் துகள் தயாரித்து வேளாண் துறை உதவியுடன் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர்.

மண்ணிற்கும், மனிதருக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் விவசாயத்தை பாதுகாப்பதுடன் போதிய லாபமும் அடைகின்றனர். பரங்கிப்பேட்டை வேளாண் துறை மூலம் கோவையில் உள்ள வேளாண் பல்கலைக் கழகத்தில் குழு தலைவர் வனஜா, பொருளாளர் லட்சுமி ஆகியோருக்கு சிறப்பு பயிற்சி அளித்து சான்று வழங்கப்பட்டுள் ளது. இங்கு உற்பத்தி செய் யப்பட்ட மருந்து வகைகள்கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து தரச்சான்று அளிக்கப்பட்டுள்ளது.

முதல் முதலாக 2.50 லட்சம் ரூபாய் செலவில் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களை சென்னையில் கொள்முதல் செய்து தில்லைவிடங்கனில் ஒரு வீட்டில் ஆய்வு கூடம் அமைத்து உற்பத்தி செய்து வருகின்றனர். இதற்கு பரங்கிப்பேட்டை ஒன்றிய வேளாண் துறை 1.25 லட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.

இந்த மருந்துகளால் நெல், வாழை, பருத்தி, கரும்பு, மணிலா, உளுந்து, பயிர், கேழ்வரகு, கம்பு, சோளம், வெள்ளரி, இஞ்சி, தக்காளி, வெண்டை, உருளை மற் றும் தென்னை உள்ளிட்ட பயிர் வகைகளை நோய் தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்த முடியும். மேலும் விதைகளை இந்த மருந்துடன் கலந்து விதை நேர்த்தி செய்வதால் விவசாயிகளிடம் அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

**எண்டியூர் கிராமத்தில் துல்லிய பண்ணையம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:18 IST

திண்டிவனம்: திண்டிவனம் அடுத்த எண்டியூர் கிராமத்தில் உள்ள கரும்பு வயலில் துல்லிய பண்ணைய விழா நடந்தது. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடந்த விழாவில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ் ணன், மரக்காணம் வேளாண்மை உதவி

இயக் குனர் ராஜேந்திரன் ஆகியோர் துல்லிய பண்ணையம் குறித்து விவரித்தனர். மரக்காணம் வேளாண் அலுவலர் ஆரோக்கியராஜ், திண்டிவனம் துணை வேளாண்மை அலுவலர் பொன்ராம், முன்னாள் ஊராட்சி தலைவர் பாலுராசன் மற்றும் கலவை ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவிகள், விவசாயிகள் ராமலிங்கம், வேலு, பாண்டுரங்கன், மச்சவல்லபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக எண்டியூரில் அமைக்கப்பட்டுள்ள துல் லிய பண்ணையத்தை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.

**மண்வள அட்டை வழங்கும் நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:12 IST

உளுந்தூர்பேட்டை: புகைப்பட்டியில் மண்வள அட்டை மற்றும் உளுந்து விதை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. உளுந்தூர்பேட்டை அடுத்த எறையூர் துணை வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் புகைப் பட்டி கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு உதவி வேளாண்மை இயக்குனர் (பொறுப்பு) தெய்வநீதி தலைமை தாங்கி விதை கள் வழங்கினார். விதை அலுவலர் இளவரசன், விரி வாக்க உதவியாளர் காம ராஜ், ராஜக்கண்ணு, சுதர் சன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். துணை வேளாண் அலுவலர் தமிழ ரசன் நன்றி கூறினார்.

**லாபம் தரும் சாமந்தி பூ சாகுபடிக்கு தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:09 IST

தியாகதுருகம்: சாமந்திப்பூ சாகுபடியில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் சிலர் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளனர்.

தியாகதுருகம் அடுத்த சாத்தனூர் பகுதியில் ஒரு சில விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடி செய்துள்ளனர். ஆத்தூரில் இருந்து விதைகளை வாங்கிவந்து கால் ஏக்கர் பரப்பில் சோதனை முறையில் பயிரிட்டுள்ளனர். இரண்டு மாதத்தில் செடி வளர்ந்து பூக்க துவங்குகிறது. மற்ற பூக்களை போல் இல்லாமல் சாமந்தி பூக்கள் பூத்து ஒருவாரம் வரை வாடாமல் செடியில் இருக் கும். தேவைப்படும் போது பறித்து விற்கமுடியும் என் பதால் இதில் நல்ல விலை கிடைக்கும் போது பூக் களை அறுவடை செய்து லாபமடைய முடியும். சாமந்தி பூ சாகுபடி செய்துள்ள சாத்தனூரை சேர்ந்த விவசாயி கணேசன் கூறியதாவது: கால் ஏக்கர் பரப்பில் சோதனை முறையில் சாமந்தி சாகுபடி செய்துள்ளேன். செடிகளுக்கு அடிஉரம் மட்டுமே இட்டு பராமரித்து வருகிறேன். பூச்சு தாக்குதல் எதுவும் இல்லாததால் வேறு செலவுகள் இதற்காக செய்யவில்லை. தற்போது செடிகள்

நன்கு செழித்து அதிக பூக்கள் பூத்துள்ளது. வரும் ஆயுத பூஜைக்கு பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதால் இதனை அப்போது விற் பனை செய்ய திட்டமிட் டுள்ளேன். தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பூக் களை பறித்து விற்பனை செய்ய முடியும் என்பதால் நல்ல லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கணேசன் கூறினார். தியாகதுருகம் பகுதி மண் வளம் சாமந்தி பூ சாகுபடிக்கு ஏற்றதாக இருப்பதால் மேலும் பல விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடியில் ஈடுபட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**ஆயுத பூஜைக்கு மாலையாக காத்திருக்கும் துளுக்கமல்லி பூக்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,02:45 IST

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் துளுக்கமல்லி பூக்களை பயிரிட்டுள்ள விவசாயிகள், கூடுதல் விலை கிடைக்கும் என்பதால், பூந்தோட்டங்களில் மலர்ந்து கிடக்கும் பூக்களை பறிக்காமல் ஆயுத பூஜையை எதிர்நோக்கி காத்து கிடக்கின்றனர். பூக்கள் பறிக்கப்படாததால் வாழப்பாடி பகுதயில் ஏராளமான பூந்தோட்டங்கள் கண்களுக்கு விருந்தளித்து வருகின்றன. வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் ஆண்டு முழுவதும் விளைநிலங்களுக்கு நீர்பாசன வசதி கொண்ட விவசாயிகள், நீண்ட கால பலன் தரும் பாக்கு, தென்னை, வெற்றிலை, கரும்பு மற்றும் வாழை ஆகிய நன்செய் பயிர் செய்து பராமரித்து வருகின்றனர். ஓரளவு பாசன வசதி  கொண்ட விவசாயிகள், குறுகிய கால பணப்பயிரான தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை பயிரிடுகின்றனர். நீர்பாசன வசதியில்லாத வானம் பார்த்த பூமிகளான மானாவாரி புன்செய்  விவசாயிகள், வறட்சியை தாங்கி வளரும் மரவள்ளி, கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை ஆகியவற்றை பயிரிடுகின்றனர்.

வாழப்பாடி பகுதி கிராமங்களில் மலர் சாகுபடிக்கு ஏற்ப மண்வளமும், சீதோஷ்ண நிலையும் காணப்படுவதால், ஆண்டு முழுவதும் கணிசமான வருவாய் கொடுக்கும் "பூந்தோட்டங்கள்' அமைத்து பராமரிப்பதிலும் விவசாயிகள்  ஆர்வம் காட்டி வருகின்றனர். சம்பங்கி உள்ளிட்ட ஒரிரு மலர் சாகுபடிக்கு தோட்டக்கலைத்துறை மானியம் வழங்குவது மலர் சாகுபடி  விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. வாழப்பாடி அடுத்த தும்பல், பாப்பநாயக்கன்பட்டி, இடையப்பட்டி, முத்தம்பட்டி, மன்னாயக்கன்பட்டி, மாரியம்மன்புதூர், மேலூர், துக்கியாம்பாளையம், கொட்டவாடி, வேப்பிலைப்பட்டி, திருமனூர், முடியனூர், வெள்ளாளகுண்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், சம்பங்கி, கனகாம்பரம், அரளி, சாமந்தி, துளுக்கமல்லி, மல்லிகை, காக்கட்டான் மல்லி, ஜாதிமல்லி, கோழிக்கொண்டை ஆகியவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். வாழப்பாடி பகுதியில் ஆயுத பூஜை தருணத்தில் நல்ல விலை கிடைக்கும் என்பதால், அதனை கணக்கில் கொண்டு ஏராளமான விவசாயிகள் குறைந்த பராமரிப்பில் கணிசமான வருவாய் ஈட்டிக்கொடுக்கும் துளுக்கமல்லியை அதிகளவில்

பயிரிட்டுள்ளனர். ஏறக்குறைய 500 ஏக்கர் பரப்பளவில் துளுக்கமல்லி பயிரிடப்பட்டுள்ளது. பயிரிடப்பட்ட தோட்டங்கள் தோறும்  மொட்டுக்கள் மலர்ந்து பல நாட்கள் கடந்த நிலையிலும், கூடுதல் விலை கிடைக்கும் என்பதால், தோட்டத்தில் மலர்ந்து கிடக்கும் பூக்களை பறிக்காமல் துளுக்கமல்லி பயிரிட்டுள்ள விவசாயிகள், ஆயுத பூஜையை எதிர்நோக்கி காத்து கிடக்கின்றனர். பூக்கள் பறிக்கப்படாததால், வாழப்பாடி பகுதியில் ஏராளமான பூந்தோட்டங்கள் ரம்மியாக கண்களுக்கு விருந்தளித்து வருகின்றன.

தற்போது ஒரு கிலோ துளுக்கமல்லி 20 ரூபாய்க்கு மட்டுமே விலைபோகிறது. எதிர்வரும் 16ம் தேதி ஆயுத பூஜை என்பதால், ஏராளமானோர் வாகனங்களுக்கும், தொழிற்சாலைகள், வீடுகளை அலங்கரிக்கவும், ஸ்வாமிகளை பூஜிக்கவும் ஆயிரக்கணக்கில் மாலையை கொள்முதல் செய்வர். எனவே, தோட்டத்தில் பூத்துக்குலுங்கும் துளுக்கமல்லி பூக்களை  நாளை  முதல் பறித்து மார்க்கெட்டிற்கு கொண்டு சென்று விற்பனை செய்ய விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். மாலையாக காத்திருக்கும் துளுக்க மல்லி பூக்கள் ஒரு கிலோ நூறு ரூபாய்க்கு மேல் விற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சீதாப்பழம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,02:38 IST

நங்கவள்ளி: சீதாப்பழம் விற்பனை களைகட்டியுள்ள போதிலும், விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. மருத்துவ குணம் கொண்ட சீதாப்பழம் விற்பனை அக்டோபர், நவம்பர் மாதங்களில் அமோகமாக இருக்கும். சேலம் மாவட்டத்தில் நங்கவள்ளி, மேச்சேரி, காருவள்ளி, ஜலகண்டாபுரம், இருப்பாளி, சீரகாபாடி உள்ளிட்ட பகுதி மலையோரங்களில் சீதாப்பழம் அதிகப்படியாக விளையும். தற்போது சீசன் துவங்கி உள்ளதால் மதுரை, திருச்சி, கோவை, திருப்பூர், சென்னை, பாண்டிச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு அதிகப்படியாக கொண்டு செல்லப்படுகிறது. கடந்த ஆண்டில் ஒரு கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்பனையானது. இந்த ஆண்டு ஒரு கிலோ ஒன்பது ரூபாய் வரை விலைபோகிறது. நேற்று மட்டும் நங்கவள்ளி சந்தையில் 12 டன் சீதாப்பழம் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக எடுத்து செல்லப்பட்டது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பயிர் பாதுகாப்புக்கு வேம்பு உரம் மருந்து**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,01:59 IST

நாமக்கல்: "பயிர் பாதுகாப்புக்கு சிறந்த மருந்தாக வேம்பு பொருட்கள் பயன்படுகிறது' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: இந்தியாவில் 18 மில்லியன் வேம்பு மரம் உள்ளது. அதில் 0.7 மில்லியன் டன் அளவுக்கு வேப்பம் பழம் கிடைக்கிறது. இந்த வேப்பம் பருப்பில் 50க்கும் மேற்பட்ட கூட்டு பொருட்கள் உள்ளன. பயிர் பாதுகாப்புக்கு சிறந்த மருந்தாக வேம்பு பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. வேப்பம் பருப்பு பயிர்ப் பாதுகாப்பில் அகவுணி, வெள்ளை ஈ, இலைத் துளைப்பான், பழ ஈ மற்றும் இலை உண்ணும் புழுக்கள் போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்தப் பயன்படுகிறது. வேப்பம் பழங்களிலிருந்து வேப்பங் கொட்டைகளை எடுத்து தண்ணீரில் கழுவி நிழலில் உலர வைக்க வேண்டும். பின் சுத்தமான ஐந்து கிலோ பருப்பினை எடுத்து நன்கு அரைக்க வேண்டும்.

வெண்மையான குழம்பினை மஸ்லின் பைத் துணியில் வைத்துக் கட்டி மூன்று மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். அவற்றை 100 மி.லி., ஒட்டு திரவத்தை டீபால் தண்ணீரில் நன்கு கலக்க வேண்டும். நான்கு அல்லது ஐந்து மஸ்லின் பைத் துணியில் உள்ள சாற்றைப் பிழிய வேண்டும். அதன்மூலம் கிடைக்கும் பால் போன்ற திரவத்தை பயிர்களுக்கு தெளிக்க பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் நச்சுத்தன்மை பயிர்களில் தங்கி இருக்காது. தவிர, தேனீக்கள் செயல்பாடு பாதிக்கப்படாததோடு, பூச்சிகளை உண்ணும் பறவையினங்களுக்கும் பாதுகாப்பாக அமையும். அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மைய களப்பணியாளர்களை அணுகி விவரம் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மகளிர் பால் பண்ணை புதிய கட்டிடம் திறப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,01:58 IST

நாமக்கல்: எருமப்பட்டி அமுதசுரபி மகளிர் பால் பண்ணை கூட்டமைப்புக்கான புதியக் கட்டிடத் திறப்பு விழாவில், 88 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான கடனுதவி வழங்கப்பட்டது. நாமக்கல் அருகே எருமப்பட்டி யூனியன் கணவாய்ப்பட்டியில் அமுதசுரபி மகளிர் பால்பண்ணை கூட்டமைப்புக்கான புதியக் கட்டிடத் திறப்பு விழா, மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடனுதவி வழங்கும் விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் மதுமதி தலைமை வகித்தார். மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் பங்கேற்று பேசியதாவது: கிராமப்புற பெண்கள் முன்னேற்றத்துக்காக துவங்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்களுக்கு, தொழில் துவங்க வங்கிக்கடன் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 47 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நேரடிக் கடனாக 64 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நான்கு சுய

உதவி குழுக்களுக்கு சுழல் நிதியாக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய், மூன்று சுயஉதவி குழுக்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய், பால் பண்ணையில் உறுப்பினர்களாக உள்ள 50 பேருக்கு மூன்று லட்சம் ரூபாயும் தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் பெற்ற மகளிர் சுயஉதவி குழுவினர் நல்ல தொழிலை தேர்வு செய்து தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக, 88 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பிலான கடனுதவியை இணையமைச்சர் காந்திசெல்வன் வழங்கினார். எருமப்பட்டி யூனியன் சேர்மன் இளஞ்செழியன், தாசில்தார் திருஞானம், முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்ட மேலாளர் சத்தியமூர்த்தி, பஞ்சாயத்து தலைவர் சிவக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு செயல்விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,01:36 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் மூலம் மொரப்பூர் ஒன்றியம் அண்ணாமலைப்பட்டி கிராமத்தில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு செயல்விளக்கம் நடந்தது.முன்னோடி விவசாயி குப்புசாமி நிலத்தில் நடந்த முகாமுக்கு, வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் தலைமை வகித்தார். பருத்தி மற்றும் கத்தரி ஆகிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் இனக்கவர்ச்சி பொறிகள் பங்கு குறித்து விளக்கப்பட்டன.இனக்கவர்ச்சி பொறி பயிர்களில் வைப்பது குறித்து விளக்கப்பட்டன. ஏக்கருக்கு ஐந்து எண்கள் பயிரின் உயரத்துக்கு மேல் ஒரு அடி உயரத்தில் இருக்குமாறு வைக்கப்பட வேண்டும்.

இதனுள் வைக்கப்படும் லூரில் இருந்து பெண் அந்துப்பூச்சிகள், ஆண் அந்துப்பபூச்சிகளை கவர சுரக்கும் திரவத்தின் வாசனை வெளி வருவாதல், ஆண் அந்துப்பூச்சிகள் கவர்ந்து அளிக்கப்படுகின்றன.இதன் மூலம் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் கூட்டுப்புழுக்களில் இருந்து அந்துப்பூச்சிகள் வெளிவரும் தருணம் அறிய முடிவதால் உரிய காலத்தில் பயிர் பாதகாப்பு நடவடிக்கை எடுத்து பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை எளிதில் காக்க உதவுகின்றது.பூச்சி மருந்துகள் அடிப்பதன் எண்ணிக்கை குறைகிறது. பூச்சி மருந்துகளுக்கு உண்டாகும் எதிர்ப்பு தன்மை குறைகிறது. ஒவ்வொரு வகை பூச்சிகளுக்கும் தனித்தனியே லூர்கள் கிடைக்கின்றன.பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப பயிர்களில் தோன்றும் பூச்சிகளுக்கான லூரினைப்பெற்று அவற்றை வைக்க வேண்டும். மாதம் ஒரு முறை மாற்ற வேண்டும் எனவும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

இப்பயிர்களின் தோன்றும் வெள்ளை ஈ மஞ்சள் வண்ணத்தால் ஈர்க்கும். அவர்றின் தாக்குதலை குறைக்க மஞ்சள் (நிற) வண்ண பொறி ஏக்கருக்கு ஐந்து எண்கள் வைத்தி கர்வந்தளிப்பது பற்றியும்

விளக்கப்பட்டன.இதில், அந்த பகுதியை சார்ந்த துல்லிய பண்ணை திட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். செயல் விளக்க திட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கருத்துக்கள் கூறுகையில் இந்த தொழில் நுட்பம் பூச்சி மருந்தடிக்கும் செலவினை குறைØத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவும்.மேலும் மிக எளிமையான வகையில் அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி பயன் பெற முடியும். ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் அமுதவள்ளி செய்திருந்தார்.

### இரண்டாம் போகத்தில் 125 நாள் நெல் சாகுபடி

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,02:37 IST

டி.என்.பாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை இரண்டாம் போகத்தில் 125 நாள் வயதுள்ள நெற்பயிர் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.தடப்பள்ள, அரக்கன் கோட்டை பாசனத்தில் முதல் போக சாகுபடிக்கு ஏப்ரல் 15ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் மூலம், சமீபத்தில் நெல் அறுவடை முடிந்தது. தொடர்ந்து, இரண்டாம் போக சம்பா சாகுபடிக்கு தற்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.இதற்காக, டி.என்.பாளையம் விவசாயிகள் நெல் நடவை துவக்கியுள்ளனர். பெரும்பாலும், 125 நாள் வயதுள்ள நெல் ரகங்களான, ஏ.டிடி.38, 39, 45, கோ43, வெள்ளை பொன்னி நெல் ரகங்களை விவசாயிகள் தேர்வு செய்து நடுகின்றனர். டி.என்.பாளையம் யூனியனில் 3,000 ஹெக்டேரில் இரண்டாம் போக சாகுபடி துவங்கியுள்ளது. இதில், 1,525 ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி முறையைக் கையாள வேளாண் துறையினர் திட்டமிட்டுள்ளனர். டி.என்.பாளையம் வேளாண் உதவி அலுவலர் சரோஜா கூறுகையில், ""தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறப்பால், சாகுபடி பணி தீவிரமடைந்துள்ளது. அடியுரமாக ஏக்கருக்கு டி.ஏ.பி., 75 கிலோ, யூரியா 25 கிலோ, பொட்டாஷ் 15 கிலோ, நூண்ணுட்டம் ஐந்து கிலோ இடுவது அவசியம்,'' என்றார்.

### நெற்பயிரில் மர்மநோய் தாக்குதல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,01:31 IST

உடுமலை:அமராவதி ஆயக்கட்டு பகுதியில் மர்மநோய் தாக்குதலால் நெற்பயிர்களில் உள்ள மணிகள் உதிர்ந்து விடுவதால் விவசாயிகள் பெரும் இழப்பை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உடுமலை அருகே கல்லாபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நெல் உற்பத்தி அதிகளவில் உள்ளது. அமராவதி பாசனத்தின் மூலம் இப்பகுதியில் மூன்று போகங்களிலும் நெல் பயிரிடப்படுகிறது. இந்தாண்டு விவசாயிகள் குண்டு நெல் ரகத்தை பயிரிட்டனர். ஆயக்கட்டு பாசனம் மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு இப்பகுதியில் ஆயிரம் ஏக்கரில் நெல்

பயிரிடப்பட்டது.இப்பயிர்கள் 70 நாட்கள் ஆன நிலையில், தற்போது கதிர் பிடிக்கும் தருணத்தில் மர்மநோய் இப்பகுதியில் பரவ துவங்கியுள்ளது. பயிரின் தண்டு பகுதியில் வெள்ளை நிறத்தில் பூஞ்சாணம் போல் உற்பத்தியாவதால் நெற் பயிர்களின் வளர்ச்சியில் தடை ஏற்படுகிறது.

சில நாட்களில் கதிர்களில் உள்ள மணிகள் போதிய ஊட்டம் இல்லாமல் காணப்படுவதுடன், தண்டு முறிந்து விடுகிறது. நோயை கட்டுப்படுத்த வேளாண்துறையிடமும், தனியார் மருந்து நிறுவனங்களிடமும் பரிந்துரை பெற்று மருந்து தெளித்தனர்.பத்து நாட்களுக்குள் விவசாயிகள் பயிர்களுக்கு மூன்று மருந்து தெளித்தும் எந்த பலனும் இல்லை. இதனால், கல்லாபுரம் பகுதியில் பயிரிடப்பட்ட நெற்பயிரில் மணிகள் இல்லாமல் வெறும் சக்கையாக மாறியுள்ளது.விவசாயி தங்கவேல் கூறியதாவது:வேளாண்துறையினர் குலை நோய் என தெரிவித்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள பரிந்துரைத்தனர். அதிகாரிகளின் காலம் கடந்த நடவடிக்கையால் எந்த பலனும் இல்லாமல் அறுவடை தருணத்தில் கதிர்கள் வெறும் "கருக்காயாக' மாறியுள்ளது.நடவு முதல் தற்போது வரை நெற்பயிருக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டுள்ளோம். விஞ்ஞானிகள் குழு இப்பகுதியில் ஆய்வு நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

**ரூ.45 லட்சத்துக்கு நிலக்கடலை வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,01:19 IST

அவிநாசி:சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 4,525 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தைவிட 1,500 மூட்டை குறைவு. வரத்து குறைந்துள்ள நிலையில் ரூ.100 முதல் ரூ.150 வரை குவிண்டா லுக்கு விலை குறைந்தது. ஆனால், பச்சை ரகம் குவிண்டாலுக்கு ரூ.100 அதி கரித்தது. வரத்து அதிகமாக இருந்ததால் நேற்று மாலை வரை ஏலம் நடந்தது.காய்ந்த நிலக்கடலை முதல் ரகம் குவிண் டாலுக்கு ரூ.3,450 முதல் ரூ.3,610 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,150 முதல் ரூ.3,350 வரை, பச்சை ரகம் ரூ.1,500 முதல் ரூ.1,800 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) ரமேஷ் குமார் கூறுகையில், ""கடந்த வாரத்தைவிட சற்று வரத்து குறைந்திருந்தாலும், 4,000 மூட்டைகளை தாண்டி விட் டது. ரூ.45 லட்சத்துக்கு
வர்த் தகம் நடந்தது,'' என்றார்.

**கத்தரிக்காய் கொள்முதல் விலை திடீர் சரிவு; விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 11,2010,04:09 IST

பல்லடம்: கோவை, திருப்பூருக்கு வெளிமாவட்ட கத்தரிக் காய் வரத்து அதிகரித்துள்ளதால், உள்ளூர் கத்தரிக் காய் கொள்முதல் விலை கிலோவுக்கு ஆறு ரூபாய் சரிந்துள்ளது, பல்லடம் பகுதி விவசாயிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் செலக் கரிச்சல், அனுப்பட்டி, மந்திரிபாளையம், வேப்பங் கொட்டை பாளையம், தாசநாயக்கன்பாளையம் உட்பட பல  இடங்களில் 800 ஏக்கர் பரப்பளவில் கத்தரிக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள கத்தரிக்காய் அறுவடைக்கு பின், பல்லடம், திருப்பூர், கோவை, ஒட்டன்சத்திரம் மற்றும் கேரளா  ஆகிய பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு விவசாயிகளால் நேரடியாகவும், வியாபாரிகள் மூலமாகவும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களாக, பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை பகுதிகளில் அடிக்கடி மழை விட்டு, விட்டு பெய்து வருவதால், கத்தரிச் செடிகளில் உள்ள பூக்கள் தொடர்ந்து உதிர்ந்து வருகின்றன. பூக்கள் விழுந்து வருவதால், பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் கத்தரிக்காய் விளைச்சல்  கடந்த ஒரு வாரமாக குறைந்துள்ளது.

விளைச்சல் குறைந்துள்ளதால், கொள்முதல் விலை அதிகரிக்கும் என இப்பகுதி விவசாயிகள் நினைத்திருந்தனர். ஆனால், திருப்பூர், கோவை பகுதியில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் இருந்து "ஹைபிரட்' ரக கத்தரிக்காய், மூட்டை, மூட்டையாக குவிந்து வருகிறது. வெளிமாவட்ட கத்தரிக்காய் வரத்து அதிகரிப்பு காரணமாக, உள்ளூர் மார்க்கெட் கத்தரிக்காய் கொள் முதல் விலை சரிந்துள்ளது. கடந்த வாரம் பல்லடம், சுல்தான்பேட்டை பகுதி விவசாயிகளிடம் ஒரு கிலோ கத்திரிக்காய் ரூ.18க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது; தற்போது, ரூ.12க்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இவ் விலை சரிவு, பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டார கத்தரி விவசாயிகளை கவலை அடையச் செய்துள்ளது.

**கரும்பு சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சதவீத மானியத்தில்ரூ.3 கோடி இலக்கு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2010,22:17 IST

விருதுநகர் : மாவட்டத்தில் நிலவள நீர்வள திட்டத்தின் கீழ் கூட்டுறவுத்துறை சார்பில் சொட்டு நீர் பாசனம் அமைக்க, 65 சதவீத மானியத்தில் 3 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
மாவட்டத்தில், சிவகிரி தரணி சர்க்கரை ஆலையுடன் இணைந்து 2010-11க்கு சொட்டு நீர் பாசனத்திற்கு கடன் வழங்க கூட்டுறவுத்துறை முடிவு செய்துள்ளது. ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், வத்திராயிருப்பு, சிவகாசி, வெம்பக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு நீர் வள, நில வள திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியத்துடன்

கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கரில் சொட்டு நீர்பாசனம் அமைக்க 55, 400 ரூபாய் திட்ட மதிப்பீடும், இதில் 65 சதம் அரசு மானியம் போக 19, 500 ரூபாய் கடன் தொகையாக வழங்கப்படவுள்ளது. சொட்டு நீர் பாசன வசதி அமைக்க கோரினால் சர்க்கரை ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப பிரிவு இதற்கான திட்ட மதிப்பீடு வழங்கும். இதை கூட்டுறவுத்துறை பரிசீலித்து, தோட்டகலைத்துறைக்கு அனுப்பி அனுமதி பெறப்படும்.

பின்னர் திட்ட மதிப்பீடு வங்கி அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு உடனடியாக சொட்டு நீர் பாசன வசதி அமைத்து தரப்படும். சொட்டு நீர் பாசனத்திற்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு 12.5 சதம் வட்டி வசூலிக்கப்படும். இதுவரை கரும்பு விவசாயிகளுக்கு 49 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 3 கோடி ரூபாய் கடன் வழங்கப்படவுள்ளது.

**பருத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு மேலாண்மை நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:00 IST



**மக்னீசிய குறைபாடு:** அறிகுறிகள்: சுண்ணாம்புச்சத்து மிகுந்த மண்ணில் இந்த ஊட்டச்சத்து குறைபாடு அதிகம் தென்படும். மேலும் மணிச்சத்து, சாம்பல்சத்து உள்ள உரங்களை அதிகம் இடுவதாலும் இக்குறைபாடு ஏற்படுகிறது. ஆரம்ப நிலையில் இலைகள் முதிர்ச்சி அடையாமல்

காய்ந்து உதிர்ந்துவிடும். இக்குறைபாடு முதிர்ச்சியற்ற நிலையில் இலைகள் செந்நிறம் அடைந்துவிடும். அடி இலைகள் ஊதா கலந்த சிவப்பு நிறமாகவும் இலை நரம்புகள் பச்சையாக, தெளிவாகவும் காணப்படும்.


**மேலாண்மை:** மக்னீசியம் சத்துக் குறைபாடு உள்ள நிலங்களில் விதைப்பிற்கு முன் மக்னீசியம் சல்பேட் 25-50 கிலோ / எக்டர் அளவில் இட்டு பருத்தியை விதைப்பு செய்ய வேண்டும். பருத்தியில் காய்கள் உருவாகும்போது இந்த அறிகுறிகள் தென்பட்டால் மக்னீசியம் சல்பேட் 25-50 கிலோ/எக்டர் அல்லது 2% மக்னீசியம் சல்பேட் கரைசலை தெளிக்க வேண்டும். அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் மக்னீசியம் சல்பேட்டுடன் 10 கிராம் யூரியா கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

**துத்தநாக குறைபாடு:** சுண்ணாம்புச்சத்து மிகுந்த அதிக களி கலந்த நிலங்களில் இக்குறைபாடு தென்படும். சாதாரணமாக விதைத்த 3 வாரங்களில் இக்குறைபாட்டுக்குரிய அறிகுறிகள் தென்படும். இளஞ்செடிகளில் இந்த பாதிப்பு அதிகமாக இருக்கும். இலைகள் மிகவும் சிறுத்து, தடித்து, விரைப்பான, இலை நரம்பு அமைவுக்கிடையில் பச்சையமற்று காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் மேல்நோக்கி சுருண்டு காணப்படும். இலைகள் செம்மைநிற புள்ளிகளுடன் துருபிடித்ததைப்போல் காணப்படும். துத்தநாகக் குறைபாட்டின் இறுதி நிலையில் இலைகள் பொன்நிறமாக மாறி காய்ந்து சருகுபோலாகிவிடும். இலைகள் இடைவெளி கணுக்கள் வளர்ச்சிஅடையாமல் சிறுத்து குட்டைத் தன்மையுடன் காணப்படும். காய் பிடிப்பதற்கு முன்பே பூக்கள் உதிர்ந்துவிடும். துத்தநாக குறைபாட்டால் பயிர் முதிர்ச்சி அடையும் நிலை தாமதிப்பதோடு பருத்தி இழையின் தன்மையும் பாதிக்கப்படும்.

**மேலாண்மை:** அடியுரமாக துத்தநாக சல்பேட் 15-25 கிலோ/எக்டர் என்ற அளவில் மண்ணில் இட்டு குறைபாட்டைத் தவிர்க்கலாம். துத்தநாக சல்பேட் 4-5 கிலோவுடன் சுட்ட சுண்ணாம்பு 2.5 கிலோவை 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து இக்கரைசலை 1 எக்டருக்கு தெளிக்கவும். (தகவல்: தா.ஷெரின், ரெ.கவிமணி, ரா.பாஸ்கரன், பருத்தி ஆராய்ச்சி நிலையம், வேப்பந்தட்டை-621 116)

## நெல்லில் ஒருங்கிணைந்த செம்பேன் கட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:00 IST




தற்போது பயிரிடப்பட்டு வரும் பல்வேறு ரக நெற்பயிர்களில் செம்பேன் தாக்குதல் அதிகம் தென்பட்டு வருகிறது. சிலந்தி வகையைச் சேர்ந்த இச்செம்பேன்கள் கண்களுக்கு தெளிவாகப் புலப்படாது. அதாவது ஒரு மி.மீ. அளவிற்கும் சிறியவை. சாதாரண கை உருப்பெருக்கிகள் கொண்டுதான் நன்றாகப் பார்க்க முடியும்.

எட்டுக்கால்களைக் கொண்ட இந்த நுண்ணிய செம்பேன்கள் நெற்பயிரில் இலைகளின் அடிப்புறத்தில் இருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகளின் மேற்பரப்பில் பழுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளி நிறத்தில் புள்ளிகளும் மெல்லிய வரிகளும் ஏற்பட்டு நாளடைவில் இலைகள் வெளிறி கருகிவிடும். அதிக எண்ணிக்கையில் பெருகும்போது இலையின் மேற்பரப்பிற்கும் வந்து சாற்றை உறிஞ்சி மிகுந்த அளவில் சேதம் ஏற்படுத்துகிறது. நாற்றங்கால்களிலும் நடவு வயலிலும் இதன் பாதிப்பால் 25 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. வெப்பமான மழைக்காலத்தை ஒட்டி இதன் தாக்குதல் அதிகம் தென்படும். வயற்பரப்பில் அதிகமான ஈரப்பதமும் வெப்பமும் இருத்தல், நெருக்கமான நடவு, போதுமான காற்றோட்டமும் சூரிய

வெளிச்சமும் இல்லாதது, களைகள் மண்டிக்கிடப்பது, தேவையில்லாமலும் தேவைக்கு அதிகமாகவும் விஷப்பூச்சி மருந்துகளைத் தெளித்து இயற்கை எதிரிகளை அழிப்பது போன்றவை இந்த நெற்செம்பேன்களின் அதிவேகமான இனப்பெருக்கத்திற்கு முக்கிய காரணங்களாகும். எனவே இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றுடன் கீழ்க்காணும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளையும் கடைப்பிடித்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

**மேலாண்மை முறைகள்**

சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற பூஞ்சாணத்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்து விதைப்பதால் செம்பேன் தாக்குதலைத் தவிர்க்கலாம். வயலில் களைகளை அகற்ற வேண்டும். செம்பேன்கள் பாதித்த பாகங்களை சேகரித்து அழித்தல் வேண்டும். எதிர்ப்புத்திறன் உள்ள நெல் ரகங்களைக் கண்டறிந்து பயிர்செய்ய வேண்டும். தழைச்சத்து அதிகம் இடுவதைத் தவிர்க்கவும். தழைச்சத்தை யூரியா வடிவில் வேப்பம் புண்ணாக்குடன் 5:1 என்ற விகிதத்தில் கலந்து இடவேண்டும். தொடர்ந்து நெல் சாகுபடி செய்யாமல் பயிர் சுழற்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

செம்மை நெல் சாகுபடி முறைகளைப் பின்பற்றும்போது பொதுவாக செம்பேன் மற்றும் இதர பூச்சிகளின் தாக்குதல் மிகக்குறைவாக உள்ளது. செம்பேன்களின் எண்ணிக்கை இலைக்கு 10 என்று மிகும்பொழுது நனையும் கந்தகம் 80 சதம் (அ) 6.25 கிராம்/லி. புரபெனோபாஸ் (அ) 2 மிலி/லி, ஸ்பைரோமெசிபென் 0.75 மிலி/லி அல்லது 3 சத வேப்பெண்ணெய் கரைசல் 5 சதம் வேப்பம்பருப்புச்சாறு போன்றவற்றைத் தெளித்து கட்டுப்படுத்தலாம். பூச்சிமருந்து தெளிக்கும்போது தவறாது ஒட்டும் திரவம் 0.5 மிலி/லி என்ற அளவில் சேர்க்க வேண்டும்.

ஜெ.ஜெயராஜ், சி.சின்னையா மற்றும் எஸ்.மணிசேகரன்,
வேளாண் பூச்சியியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:00 IST



**பாரம்பரிய நெல் "சொர்ணமசூரி"-** இது ஒரு சன்ன ரகம். இதன் வயது 105 நாட்கள். எல்லா மண்ணிலும் வரும். சம்பா தாளடிக்கு ஏற்ற ரகம். தொழு உரம் தண்ணீர் மட்டுமே போதும். அரை ஏக்கரில் 18 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்தது என்று தெரிவிக்கிறார் அனுபவ விவசாயி கிருஷ்ணன். இவர் தஞ்சாவூர் மாவட்டம் பாலாக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர். தொடர்புக்கு: 93627 79362.

அரை ஏக்கர் நடவு செய்ய அரை சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைத்தால் போதும். 500 கிலோ தொழு உரம் போட்டு இரண்டு சால் உழவு ஓட்டியபிறகு நாற்றங்காலில் 2 கிலோ விதையைத் தூவி தண்ணீர் கொடுத்துவந்தால் 22ம் நாள் நடவுக்கு தயாராகிவிடும்.

நடவு செய்யும் நிலத்தில் 2 சால் உழவு ஓட்டி 4 டன் தொழு உரம் போட்டு மீண்டும் ஒரு சால் உழவு ஓட்டி 30 செ.மீ. இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக நடவு செய்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவிலிருந்து 25, 40ம் நாள் கோனோவீடர் ஓட்டி களையை அழுத்திவிட வேண்டும். வேறு எந்த இடுபொருளும் தேவைப்படாது. ஒரு நாற்றுக்கு சுமார் 25 தூர்கள் வரையும் வெடிக்கும். பூச்சி, நோய் எதுவும் இப்பயிரை தாக்குவதில்லை. நடவிலிருந்து 105ம் நாள் அறுவடை செய்யலாம். விவசாயி 102ம் நாள் அறுவடை முடித்துவிட்டார்.

அரை ஏக்கர் 900 கிலோ நெல் மகசூல் கிடைத்துள்ளது. இது அதிசன்ன ரகம் என்பதாலும், பாரம்பரிய ரகம் என்பதாலும் ஒரு கிலோ நெல் 25 ரூபாய்க்கு விலைபோனது. இதன்மூலம் 900 கிலோவுக்கு 22, 500 ரூபாய் விலை கிடைத்துள்ளது. செலவு போக அரை ஏக்கரில் நிகரலாபமாக 18 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது. **(தகவல்: பசுமை விகடன்)**

தக்காளி - ஊ1 ஹைபிரிடு - ""ஹீமசோனா" - சின்ஜெண்டா **(Syngenta)** வழங்கும் இந்த ரகம் கெட்டியான கல் போன்ற தக்காளி பழங்களைக் கொண்டது. மேலும் விபரங்களுக்கு 94421

13759. மண்டல அலுவலகம், சின்ஜெண்டா இந்தியா லிமிடெட், விதைப்பிரிவு, 250ஏ, கண்ணப்பநகர், ரத்தினபுரி, சங்கனூர் மெயின்ரோடு, கோயம்புத்தூர்-641 027. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**வறட்சியின் பிடியில் இருந்து கரும்பை காப்பாற்ற...**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 13,2010,00:00 IST

வறட்சியை தாங்கி வளரும் ரகங்களான கே85019, கோ86010, கோ7704, கோ.க.671, கோ.சி.96071 ஆகியவற்றை உபயோகப்படுத்த வேண்டும். தொழு உரம் அல்லது கம்போஸ்ட் ஒரு ஏக்கருக்கு 5 டன் அல்லது 6 டன், கரும்பு ஆலைக்கழிவு மண் இவற்றில் ஏதேனும் ஒன்றினை கரும்பு நடும் முன் கடைசி உழவின்போது மண்ணுடன் சேர்த்தால் நீர் பிடிப்புத்திறன் அதிகரிக்கும். விதை கரணைகளை நீர்த்த சுண்ணாம்பு கரைசலில் ஒரு மணி நேரம் நனைத்து நட்டால் விதைக்கடினம் ஏற்பட்டு நல்ல வேர் வளர்ச்சிபெற உதவிடும். கரும்பு நட்ட இரண்டு, மூன்று நாட்களில் காய்ந்த சோகைகளை பார் மீது சுமார் 15 செ.மீ. உயரத்திற்கு பரப்பி வைத்தால் மண்ணின் ஈரம் காக்கப்படுவதுடன் முளைத்துவரும் குருத்துக்கள் காக்கப்படும். இளங்குருத்தின் சேதமும் குறையும். பயிரின் ஆரம்ப வளர்ச்சி பருவத்தில் வறட்சி காணப்பட்டால் பொட்டாசியம் குளோரைடு கரைசல் தெளித்தால் வறட்சி தாங்கும் திறன் அதிகரிக்கும்.

இதற்கு நூறு லிட்டர் தண்ணீரில் இரண்டரை கிலோ யூரியாவை கரைத்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். கரும்பு நட்ட 90 முதல் நூறு நாட்களில் மூன்று சதவீதம் வெள்ளை களிமண் கரைசலை தெளித்து இலை மூலம் நீர் ஆவியாவதை தடுக்கலாம்.
சுமார் ஏழு மாத கரும்பு பயிர் வறட்சியால் பாதிக்கப்பட்டால் காய்ந்த சோகைகளை உரித்துவிட வேண்டும். உரித்த சோகைகளை ஒரு பார் விட்டு ஒரு பாரில் பரப்ப வேண்டும். சோகை பரப்பாத பார்களில் மட்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு சால் விட்டு ஒரு சால் வழியாக நீர்பாசனம் செய்யலாம். ஏழு முதல் எட்டு மாத கரும்புகள் வறட்சியால் பாதிக்கப்பட்டால் ஏக்கருக்கு 50 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினை குழி முறையில் இடலாம். இதனால் மூன்றாம் நிலை வேர்களின் மூலம் பயிர் தண்ணீரை எடுத்துக்கொண்டு வறட்சியினை சமாளிக்க இயலும்.

**ந.முருகேசன்,**
**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**பருத்தி ஆராய்ச்சி நிலையம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

தினத் தந்தி

# நடப்பு நிதி ஆண்டில் காபி ஏற்றுமதி இலக்கு எட்டப்படும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் காபி ஏற்றுமதி இலக்கு எட்டப்பட்டுவிடும் என காபி வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
ஆசிய நாடுகளுள், காபி ஏற்றுமதியில் இந்திய மிகப்பெரிய நாடாக உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில் நம்நாட்டின் காபி ஏற்றுமதி 1.56 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 75 சதவீதம் அதிகமாகும். சென்ற நிதி ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் நாட்டின் காபி ஏற்றுமதி 89,140 டன் என்ற அளவில் இருந்தது.
நடப்பு முழு நிதி ஆண்டில் 2.10 லட்சம் டன் காபி ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், சென்ற முழு நிதி ஆண்டில் நம்நாட்டிலிருந்து 2.04 லட்சம் டன் காபி ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இந்தநிலையில் நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் காபி ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதையடுத்து நடப்பு நிதி ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி இலக்கை சுலபமாக எட்ட முடியும் என காபி வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.